Koviloor Digital Library

காயத்ரீ மணி மாலை











Acc.No. 30811
3-3 Q25

வேம்பத்தூர் கிருஷ்ணன்



Koviloor Digital Library



காயத்ரீ மணிமாலை – "நீதிமணி மாலை" இணைப்புடன்
இரண்டாம் பதிப்பு – ஏப்ரல் –2002
தொகுப்பு : வேம்பத்தூர் கிருஷ்ணன்
DTP : ஷேடோஸ் கம்ப்யூட்டர்ஸ், ✆ : 375 0786.
ஆனந்தி முத்துகிருஷ்ணன்,
ஓவியம் : S. கணேசன், "லே–அவுட்" ஆர். அன்பரசன்
அச்சிட்டோர் : நந்தன் ஆஃப்செட் பிரஸ் ✆: 829 0989

விலை ரூ. 5

சுடர்மணிப்பதிப்பகம்

19, பஜனைக் கோயில் தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.

1970 முதல் தேசிய தெய்விக நூல்கள் வெளியீட்டு நிறுவனம்



பேரன்புடையீர்!

அடியேன் எழுதிவெளியிட்டுள்ள ஐம்பதுக்கும் மேற்பட்ட தேசிய, தெய்விக நூல்களிலே, 7.3.2002 வெளியிடப்பெற்ற **"பாரதமாதாகாயத்ரி"** –(176, பக்கம் தபால் செலவுடன் ரூ. 65) நூல், இதிகாச கால பாரத முதல் இன்றைய பார்லிமெண்ட் (2001) இந்தியா வரையிலான ஒரு "மினி" வரலாற்றுத் தொகுப்பு.

"வரலாறு அறியாத இளையதலைமுறைக்கும், வாழ்ந்து மறந்து விட்ட முதிய நிலைக்கும், இப்போதய அவசரத் தேவையான தேசபக்தியை நினைவூட்டும் அரிய நூல் இது" என்று அறிஞர் பெருமக்கள், ஒருமித்துப் பாராட்டும் பாரதமாதா காயத்ரி தேசிய வரலாற்றுச் சுருக்கத்தைப் படித்துப்பாருங்கள். நிறைகளை எடுத்துக் கூறுங்கள், வாங்கி எல்லோர்க்கும் தாருங்கள் – ***வேம்பத்தூர் கிருஷ்ணன்.***



Koviloor Digital Library



காயத்ரீ சொல்வோம் கலியை வெல்வோம்

பக்தி குறைந்ததுமே பாவம் நிறைகிறது, பாவம் மிகுந்ததுமே மேகம் கலைகிறது. வானத்தின் மௌனத்திலே பஞ்சம் பிறக்கிறது. பசியும் நோயும் உயிர்க் குலத்தைப் பாடாய்ப் படுத்துகிறது. பூமி வெடிக்கிறது. பூகம்பம் சிரிக்கிறது. இப்படி ஒரு பஞ்சத்தை இடைக்காட்டுச் சித்தர் என்பவர் கண்டு, நவகோள்விதிகளையே, மதியால் வென்று. .. மக்களின் துயர் தீர்த்த வரலாறு ஒன்று உண்டு.

அப்படி ஒரு கொடிய பஞ்சத்தால் கோசிகநாடு. . . குடிதண்ணீர் கூட இல்லாத சுடுகாடாகிறது! நாட்டு மன்னன் தடுமாறித் துடிக்கிறான்! நடமாட முடியாத மக்கள், சருகுகளை அசை போட்டு பசித்தீயால் கருகி வருகின்றனர். அப்போது அறுசுவை உணவு வருகிறது அரண்மனைக்கு! அனுப்பியவர் பிரம்ம ரிஷி வசிஷ்டர்.

ஓடினான் மன்னன் வசிஷ்டரிடம், உணவு வந்த விவரத்தைத் தேடினான். கேட்டதைத்தரும் காமதேனுவின் கன்றான நந்தினிப்பசு தான் காரணம் எனக் கண்டு, அதைத் தனக்குக் கேட்கிறான். பிரம்ம ரிஷி மறுக்கிறார், கோபாவேசம் கொண்ட மாமன்னன், வாளைச் சுழற்றுகிறான். மகரிஷியின் தபோபல பிரம்ம தண்டத்தால், மாமன்னனின் சேனாபலம் முழுதும் காணாமல்போகிறது.



மக்களைக்காக்க, பஞ்சத்தைப் போக்க மாமன்னன் கோசிகன், தவசியாகிறான். மாதவம் செய்து, ஈசனைக்கண்டு, மகத்தான வரங்களைப்பெறுகிறான். பஞ்சம் முழுமையாகத் தீர்ந்து, பார் முழுதும் செழிப்பதற்காக.. . . பஞ்சாக்கினியிலே திரியாகக் கருகி, பரதகண்டத்திலே புதியதோர் வரலாறு

Koviloor Digital Library



படைக்கிறார். க்ஷத்திரிய மன்னனாக இருந்து, ராஜரிஷியாகி, மகரிஷியாகி பிரம்மரிஷியான விஸ்வாமித்திரர் முனிவர்களிலேயே .... மக்களின் திலகமாகத் திகழ்ந்தவர். மாமுனிவர் விஸ்வாமித்திரர் சௌபாக்ய வாழ்வுக்கான சாஸ்வத மந்திரமான காயத்ரீயை நாட்டின் பொதுஉடமை ஆக்கியுள்ளார். அந்த ராஜரிஷியின் முழு வரலாறும், அவர் தேடித்தந்த காயத்ரீ மந்திரத்தின் மகத்துவமும், மந்திர ஜபத்தின் பாலாபலன்களும். . . மாபெரிய ரிஷிகளின் பூர்விகமும், வேத இதிகாச. . சாத்திர, தோத்திர, நம்தேச சரித்திரக் குறிப்புகள் இப்படிபல. . . மிகச் சிறந்த விஷயங்களால் உருவாகி வருகின்ற **"காயத்ரீ மணிமாலை"** நூலுக்கான முன்னோட்டப் பிரசுரம்தான் இது.

திக்கற்றவர்க்குத் தெய்வமே துணையாவது போல. . தியானம் தவம் அறியாத – செய்ய முடியாத நம்மில் பெரும்பான்மை, – "மந்திரத்தால் விழுமோ மாங்காய்?" என்று கேள்விகளைக் கேட்டே கெட்டுப் போனது. தியான மந்திரங்களைச் சிந்திப்பதையே மறந்து வரும் நவீன மாநுட இனம் ; குடிதண்ணீருக்குக் கூட அடிதடி கண்டு, தெருத்தெருவாக அலைய வேண்டிய கொடிய நிலைக்கு ஆளாகிவருவது இன்றய நிதரிசனம். காடுகளை மொட்டையாக்காமல், கடவுள் வழிபாட்டை வியாபாரமாக்காமல், மாதா, பிதா, குரு இம்மூவருள் ஒருவரிடம் உபதேசம்பெற்று, சிரத்தா பக்தியுடன் காயத்ரீ சொல்வோம் கொடுமையான கலித்துயரை வெல்வோம்.

அடுத்தபக்கத்திலுள்ள, விஸ்வாமித்திரர், தந்தருளிய பூர்வ காயத்ரீ மந்த்ரத்தை, யார் வேண்டுமானாலும், எந்த நேரத்திலும், எத்தனை முறை வேண்டுமானாலும் ஜபித்து. . அதற்கான ஏராளப் பலன்களைப் பெறலாம்



Koviloor Digital Library
3-3



கண்கண்ட கடவுளாம் சூரியனின் ஒளியுள்
காண்கின்ற பேரொளிதான் காயத்ரீதேவி
மண்ணுலக மாந்தர்க்கு எல்லாம் கொடுக்கும்
மாமந்த்ர காயத்ரீ மாதாவே! போற்றி.



ஓம் பூர் புவஸ் ஸுவ ;
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி ;
தியோ யோ ந: ப்ரசோதயாத்

(பொருள் : யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ
அந்தச் கடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக.)

Koviloor Digital Library



நாதப்பிரம்ம காயத்ரீ

இது பிரம்ம காயத்ரீ அல்லது சூரிய காயத்ரீ. இதுவே நம் தேசீய பிரார்த்தனை. இதுவே நம் தேசீய மந்த்ரம். பல்லாயிரம் ஆண்டுகளாகக் காஷ்மீரத்திலிருந்து கன்னியா குமரிவரையில் இது கையாளப்பட்டுவந்துள்ளது. ஓம் அல்லது ஓங்காரம் ஓசைகள் அனைத்துக்கும் முதல் காரணம். இது நாதப் பிரம்மம் என்று இயம்பப் பெறுகிறது. ஓம் என்பது பீஜ மந்த்ரம். இதன் திரிவுகளாக ஏனைய மந்த்ரங்கள் வந்துள்ளன. ஓங்காரத்தை உச்சரிப்பதற்கு ஏற்ப, மனிதன் மேன்மையுறுகிறான். இயற்கை முழுதுக்கும் பொதுவாக அண்டமெங்கும் ஒலித்துக்கொண்டிருக்கின்ற இம்மந்த்ரத்தை யாரோ சிலர்தான் உச்சரிக்க வேண்டும் என்னும் கட்டுப் பாடு எதற்காக? சுவாசிக்கும் காற்று எல்லார்க்கும் பொதுவாக இருப்பது போன்று இந்த ஓசையும் பொது.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

ஒன்பது பத காயத்ரீ!

'மக்களுக்குச் செய்யும் தொண்டே மஹேசுவர பூஜையாகும்' என்ற செய்தியையே பிரணவம் நமக்கு அளிக்கிறது.

உபவீதத்தில் ஒன்பது நூல்கள் உள்ளன. இவை காயத்ரீயிலுள்ள ஒன்பது பதங்களையே குறிக்கின்றன. 'தத்' என்பது வாழ்க்கைத் தத்துவத்தையும், 'ஸவிது' என்பது ஆற்றல் பெறுவதையும், 'வரேண்யம்' என்பது மேன்மையையும் 'பர்கோ' என்பது தூய்மையையும் 'தேவஸ்ய' என்பது தெய்வீக நோக்கையும், 'தீமஹி' என்பது மேலான குணத்தையும், 'தியோ' என்பது விவேகத்தையும், 'யோந' என்பது தன்னடக்கத்தையும், 'ப்ரசோதயாத்' என்பது தொண்டாற்றுவதையும் விளக்கவே ஏற்பட்டுள்ளன.



- மகரிஷி தயானந்த சரஸ்வதி

Koviloor Digital Library



ஞானப் புனித நன்நாடு

ஏத்தகைய அற்புதமான நாடு இது! இந்த நாடு தத்துவ ஞானத்திற்குப்புனிதமான இடம். இங்கேதான் முதன் முதலில் மனிதனின் தன்மையைப்பற்றியும், ஆத்மாவின் இயல்பைப்பற்றியும் ஆராய்ச்சிகள் துவங்கின. "மனிதன் நித்தியமான சிரஞ்சீவியான ஆத்மா ஆவான், அவனுக்கும் மேலான ஒரு கடவுள் உண்டு அவர், இயற்கையினுள்ளும், மனிதருக்குள்ளும் எங்கும் உறைகிறார்" என்ற உண்மைகள் இங்குதான் கண்டுபிடிக்கப்பெற்றன. இந்த நாட்டில் சிரஞ்சீவியாக எழுந்து நிற்கும் இமயமலை படிப்படியாக மேலெழுந்து, பனிமுடி அணிந்து, உயர்ந்து வானுலக ரகசியங்களை நோக்குவது போல உள்ளது. உலகில் எல்லாக் காலத்திலும் வாழ்ந்துள்ள முனிவர்களிலே மிகச் சிறந்தவர்களின் திருவடிகள் நடமாடிய பாரதம் இதுவேதான்.

- சுவாமி விவேகானந்தர்.

இது சத்தியம்

செங்கதிர்த்தேவன் சிறந்த ஒளியினைத் தேர்கின்றோம்- அவன்
எங்களறிவினைத் தூண்டி நடத்துக என்பதோர்- நல்ல
மங்களம் வாய்ந்த சுருதிமொழி (காயத்ரி) கொண்டு வாழ்த்தியே...


சோர்வும் அதைரியமும் விளைவிக்கத் தக்க எண்ணங்களுக்கு இடம் கொடாதே. ஊற்றிலிருந்து நீர் பெருகுவது போல, உனக்குள்ளிருந்து, தெளிந்த அறிவும், தீரத் தன்மையும் சக்தியும் மென்மேலும் பொங்கிவரும். உனது இஷ்ட சித்திகளெல்லாம் நிறைவேறும். இது சத்தியம். அனுபவத்திலே பார்."

- மகாகவி சுப்ரமண்ய பாரதியார்.



Koviloor Digital Library

தாய்வடிவே காயத்ரீ



"காமன் உள்ளே புகுவதற்கு முன் காயத்ரீ உள்ளே புகுந்துவிடவேண்டுமென்வதுதான் முக்கியம். அதனால்தான் எட்டுவயதிலேயே பூனூல்போட வைத்தார்கள். காமத்தின் ஆவேசம் ஏற்பட்டுவிட்டால், அது மந்திர சக்தி பெறமுடியாமல் இழுத்துக் கொண்டு போகும். ஏற்கனவேபெற்ற சக்தியைக் கூட ஜீரணிக்கிற சக்தி அதற்கு உண்டு.

"காயத்ரீயில் சகலவேதமந்திரசக்தியும் அடங்கியிருக்கிறது. மற்ற எல்லா மந்திரங்களுக்கும் சக்தியைத் தருவது காயத்ரீ தான். காயத்ரீ, சாவித்ரீ, சரஸ்வதி என்று மாத்ருரூபமாக - அன்னையின்வடிவமாக - காலை, பகல், மாலை ஆகிய மூன்று காலங்களிலும் தியானம் செய்ய வேண்டும். காயத்ரீயை புருஷன் அநுஷ்டித்தால் போதும் ஸ்திரீகளுக்கு க்ஷேமம் உண்டாகும்."

-- காஞ்சி முனிவர், ஸ்ரீ மஹா பெரியவர்.

அறிவு வளர சமயச் சின்னம்

சமயச்சின்னங்கள் அணிவதற்குச் சங்கோசப்படக்கூடாது. சமயச்சின்னங்கள் அவரவர்களின் பிறப்புரிமையும், பாரம்பர்யமும், பக்தியின் பிரதிபிம்பமுமாகும். புத்தர்களும், கிறிஸ்தவர்களும், மகம்மதியர்களும் தங்கள் மதச் சின்னங்களை அணிவதில் பெருங்கடமையாக எண்ணிப் பின்பற்றுகின்றனர். இந்துக்கள் மட்டும் ஏன் வெட்கப்பட வேண்டும்?

மாணவ மணிகளே! உங்கள் படிப்புக்கு உற்றதுணை புரிவது கடவுள் பிரார்த்தனையே. அறிவு வளர்ச்சிக்கும், கல்விப் பயிற்சியின் வெற்றிக்கும், வருங்கால முன்னேற்ற வாழ்விற்கும் அருந்துணை புரிவது ஆண்டவன் வழிபாடேயாகும்.,

-- திருமுருக கிருபானந்த வாரியார்




Koviloor Digital Library

3-3

"அறநெறிச்சாரம், ஆத்திசூடி, நல்வழி, நன்னெறிகள்
ஆரம்ப, உயர்நிலை பள்ளிகல்லூரியில் இருந்தவரைநமது
தமிழகம் உலக நீதிகளுக்கே தாயகமாகத் திகழ்ந்தது
"தாட்பூட் கான்வென்ட்" போதையால் இன்றைய தமிழர் நிலை என்ன?

நீதிமணிமாலை



பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் – இவை
நாலும் கலந்துஉனக்கு நான் தருவேன் – கோல
துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா. – ஔவையார் (நல்வழி)

தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒருவிதை
தெண்ணீர் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆள்பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழல் ஆகும்மே. – ஆதிவீரராமபாண்டியன் (வெற்றிவேற்கை)

ஓயாமல் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்பர் உற்றுப்பெற்ற
தாயாரை வைவர், சதிஆயிரஞ்செய்வர் சாத்திரங்கள்
ஆயார், பிறருக்கு உபகாரஞ்செய்யார், தமைஅண்டினார்க்கொன்றும்
ஈயார், இருந்தென்ன போயென்ன காண் கச்சி ஏகம்பனே

– பட்டினத்தார் (திருஏகம்பமாலை)

KOVILOOR LIBRARY KOVILOOR
30811

Koviloor Digital Library

ஆதியாய் நின்ற அறிவு முதலெழுத்து ஓதியநூலின் பயன்(1)

(ஆதியும் அந்தமுமாகிய பிரணவத்தின் பொருள் ஐம்பூதத்துவம் அனைத்தும் கொண்டதிந்த நூல்)

ஓங்காரமான கலசத் தமிர்துண்ணில் போங்கால மில்லைபுரிந்து (63)

(தியானம் யோகம் ஆகிய பயிற்சிகளால் மரணமிலாப்பெருவாழ்வு பெறலாம்)

பத்துத் திசையும் பரந்த கடலுலகும் ஒத்தெங்கும் நிற்கும்சிவம் (191)

(பத்துத் திசைகளிலும் பார்க்கின்ற அனைத்திலும் சிவத்தைக் காண்பார் சத்தியச்சித்தர்கள்)

கற்கிலும் கேட்கிலும் ஞானம்கருத்துற நிற்கில் பரமவை வீடு (310)

(ஞானநூல் வாசிப்பும் மேலோர்கள் அருள்வாக்கும் வாழ்நாளை இனிமையாக்கும்) – ஔவையார் (ஔவை குறள்)

தானம் தவம் இரண்டும் தங்கா வியன்உலகம், வானம் வழங்காது எனின்

(மரங்களை அழித்தால், ரோடுவரை மொசைக் போட்டால் மழைநீர் ஆதாரமில்லை என்பதன் விளக்கம்)

யாகாவாராயினும் நா காக்க காவாக்கால், சோகாப்பர் சொல் இழுக்கப்பட்டு.

(நாவடக்கம் – நல்லசொல் – இல்லாதார் வாழ்விலே எல்லாமே தப்பாகும், நிலை விளக்கம்)



சிறுமை பலசெய்து சீர் அழிக்கும் சூதின், வறுமை தருவது ஒன்று இல்

(சூதாட்டம் – லாட்ரிசீட் – தரும்போதையானது, அவனை அழிக்கும் வரை தொடர்வதாம்)

ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கு இன்பம்,
கூடிமுயங்கப்பெறின் (1330) – திருவள்ளுவர் (திருக்குறள்)

(உடலுறவிலும் நெறிவேண்டும் உள்ளத்தால் மகிழ்வதே உண்மையான இன்பமாகும்)

ஒளியும் இருளும் ஒருமைத்துப் பன்மை, தெளிவு தெளியார் செயல்

(இரவும் பகலும் பார்வையற்றோர்க்கு ஒன்றாவதுபோல ஞானமில்லார்க்கு கடவுள்நிலை)

உறும் தொழிற்குத் தக்கபயன் உலகம் தத்தம், வருந்தொழிற்கு வாய்மை பயன்

"நான் எனது" எனவாழாமல் "நாம், நமது" என வாழ்வதே பேரின்பம் பயக்கும்)

– உமாபதி சிவாசார்யார் (திருவருட்பயன்)

Koviloor Digital Library

"பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்
தர்மஸம்ஸ்த்தாப நார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே". – ஸ்ரீ கிருஷ்ணர்
(தருமத்தின் வாழ்வுதனை சூது – மதவெறி, லஞ்சம், ஊழல் – கௌவும்போது நான் அவதரித்து தண்டிப்பேன்)

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே, அன்பெனும் குடில்புகும் அரசே!
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே, அன்பெனும் கரத்தமர் அமுதே!
அன்பெனும் கடத்துள் அடங்கிடுங்கடலே, அன்பெனும் உயிர் ஒளிர் அறவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே, அன்புருவாம் பரசிவமே. – ராமலிங்கவள்ளலார் (திருஅருட்பா)

மின்னொளியும் வீழ்மீனும் வேசையர்கள் கோலமும்
தம்மொளி வேண்டுவோர் நோக்கார், பகல் கிழவோன்
முன்னொளியும் பின்னொளியும் அற்று – ஆசாரக்கோவை
(ஒளியுடன் – ஆரோக்கியமாய் – வாழவேண்டுமெனில் எது எதெல்லாம் ஆகாது என்பதை விளக்குவதாம்.)

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் – செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார் – குமரகுருபரர் (நீதிநெறி விளக்கம்)

(நினைத்ததை முடிக்கும் வரை நல்லோர் ஒருபோதும்
சோர்வடையமாட்டார் என்பதன் விளக்கம்)



நல்லா றொழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற்கு ஒருப்படார் – பல்பொறிய
செங்கண் புலிஏறு அறப்பசித்துந் தின்னாவாம்
பைங்கண் புனத்தபைங் கூழ் – நீதிநெறிவிளக்கம்
(ஒழுக்க முடையவர் வறுமையில் சிதைந்தாலும் ஒருநாளும் தீயதைச் செய்யார்.)

Koviloor Digital Library

அட்டாலும் பால்சுவையில் குன்றாது அளவளாய்
நட்டாலும் நண்பு அல்லார் நண்பு அல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். – வாக்குண்டாம் (மூதுரை)

பண்பால் உயர்ந்தவர், எத்தனை தான் துயர்வந்தாலும் அனைத்தையும் ஏற்று முயற்சியால் நினைத்ததை முடிப்பர்)

கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் – தானுந்தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. – ஔவையார் (வாக்குண்டாம்)

(ஞானியரைக் கண்டு பெருமிதம்கொள்,
பொறாமை கொள்ளாதே என்பதை விளக்குவது.)



ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.

தனம்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்
தருமத்தை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்
சினம்தேடி அல்லலையும் தேடவேண்டாம்
சினந்து இருந்தார் வாசல்வழிச் செல்லல் வேண்டாம். – உலகநாதன் (உலகநீதி)

தன்உயிர்போல் எவ்வுயிரும் தான்என்று தண்அருள்கூர்
செம்மையர்க்கு ஏவல்என்று செய்வேன் பராபரமே. – தாயுமான சுவாமி (பராபரக் கண்ணி)

Koviloor Digital Library

அறஞ் செயவிரும்பு * ஆறுவது சினம் * இயல்வது கரவேல்
ஏற்பது இகழ்ச்சி * ஓதுவது ஒழியேல் * கண்டு ஒன்று சொல்லேல்
பருவத்தே பயிர்செய் * சான்றோர் இனத்திரு * செய்வன திருந்தச் செய்
சோம்பித் திரியேல் * தேசத்தோடு ஒத்துவாழ் * வைகறைத் துயில் எழு

– ஆத்திச்சூடி (ஔவையார்)



அறங்கூறு நாவென்ப நாவுஞ் செவியும்
புறங் கூற்றுக் கேளாத என்பர் – பிறன்றாரத் (து)
அற்றத்தை நோக்காத கண்ணென்ப யார்மாட்டும்
செற்றத்தைத் தீர்ந்ததாம் நெஞ்சு. – அறநெறிச்சாரம்

(நமது பிரதான உறுப்புகளான நாக்கு, காது, கண், இதயம், இவையெல்லாம் எப்படியியங்க வேண்டும் எனும் நெறியை உணர்த்தும் பாடல்)



கண்ணிரண்டே யாவர்க்குங் கற்றோர்க்கு மூன்றுவிழி
எண்ணுவிழி ஏழாகும் ஈவோர்க்கு – நண்ணும்
அநந்தந் தவத்தால் அருள்ஞானம் பெற்றோர்க்கு
அநந்தம் விழியென் றறி. – நீதிவெண்பா

(ஞானக் கண்ணை விட தானக் கண்கள் ஏழு என்பதையும், ஞானியர்க்கு ஆயிரம் கண் எனவும் விளக்கும்பாடல்)

ஈசனெதிர் நின்றாலும், ஈசனருள் பெற்றுயர்ந்த
நேசரெதிர் நிற்பதரிதாமே – தேசுவளர்
செங்கதிர்முன் நின்றாலும் செங்கதிர வன்கிரணந்
தங்கும்மணல் நிற்கரிதே தான். – நீதிவெண்பா

(கடவுளைப்பகைத்தாலும் பரவாயில்லை, உண்மையான கடவுள்பக்தர்களை பகைக்கலாகாது என்பதை விளக்குவதாம்)

Koviloor Digital Library

ஆபத்துக் குதவாப்பிள்ளை அரும்பசிக்கு உதவா அன்னம்
தாபத்தைத் தீராத்தண்ணீர் தரித்திர மறியாப் பெண்டிர்
கோபத்தை அடக்காவேந்தன் குருமொழி கொள்ளாச்சீடன்
பாபத்தைத் தீராத் தீர்த்தம் பயனில்லை ஏழுந்தானே. – விவேகசிந்தாமணி


இடுக்கினால் வறுமையாகி ஏற்றவர்க் கிசைந்தசெல்வம்
கொடுப்பதே மிகவும்நன் று குற்றமே இன்றி வாழ்வார்.
தடுத்துஅதை விலக்கினோர்க்குத் தக்கநோய் பிணிகளாகி
உடுக்கவே உடையுமின்றி உண்ணச்சோறில்லையாமே – விவேகசிந்தாமணி
இல்லாதார்க்கு உதவுவோரைத் தடுத்திடும் பொல்லாதார், பசிவறுமையால் படாதபாடுபடுவர்)



மல்லன் மா ஞாலத்து வாழ்பவருள் எல்லாம்
செல்வர் எனினும் கொடாதவர் நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார். – நாலடியார்
(இல்லார்க்கு உதவுபவரே செல்வந்தர், வறுமையிலும் இரவாமல் இருக்கும்
பண்பாளர்களே உண்மையான செல்வந்தர்)

அறிமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொல் போற்றுமின், வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மை எஞ்ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல் – நாலடியார்
(காலனுக்கு அஞ்சி, கருணையுடன் வாழ்ந்து, வாழ்விலே எப்போதும் பெரியோர் சொற்கேட்டு உயர்க.)

Koviloor Digital Library



அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
இல்லறம் அல்லது நல்லறம் அன்று
ஈயார் தேட்டை (பொருளை) தீயார் கொள்வர்

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு
தீராக் கோபம் போராய் முடியும்
நோன்பு என்பது கொன்று தின்னாமை
பாலொடு ஆயினும் காலம்அறிந்து உண்.

– ஔவையார் (கொன்றை வேந்தன்)

கைம்மாறு உகவாமல் கற்று அறிந்தோர் மெய்வருந்தித
தம்மால் இயல்உதவி தாம்செய்வர் – அம்மா
முளைக்கும் எயிறு முதிர்சுவை நாவிற்கு
விளைக்கும் வலியான தாம் மென்று.

– சிவப்ரகாசசுவாமி (நன்னெறி)

(படித்தால் மட்டும் போதாது, படித்தபடி – கற்றபடி – என்றும் பிறருக்கு உதவும் இயல்புடன் வாழ வேண்டும்)

இன்சொல்லால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொல்லால் என்றும் மகிழாதே – பொன்செய்
அதிர் வளையாய்! பொங்காது அழல்கதிரால், தண் என்
கதிர் வரவால் பொங்கும் கடல்.

– நன்னெறி.

(எந்த ப்ரச்சினையானாலும் இனிமையாகப் பேசித்தீர்க்க வேண்டும். கடுமையும் சினமும் காரியச் சீரழிவாம்)

Koviloor Digital Library

ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்பர் இந்தியாவில் இல்லையே
வாழிகல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரும் ஒருநிகர் சமானமாக வாழ்வமே. – மகாகவி சுப்ரமணியபாரதி

வாலிமடிந்ததுவும் வல்லரக்கர் பட்டதுவும்
கோலமுடி மன்னர் குறைந்ததுவும் – சால
மதியுடைய நூற்றொருவர் மாண்டதுவும், ஐயோ!
சதவிகரத் தால்வந்த தாழ்வு. – கவிராஜகாளமேகம்
("பிற பெண்ணைத் தாயாய் பேணிடவேண்டும்" என்பதை இதிகாச வரலாற்று ஆதாரத்துடன் கூறும் பாடல்.)


வில்லம்புஞ் சொல்லம்பும் மேதகவே யானாலும்
வில்லம்பிற் சொல்லம்பே வீறுடைத்து – வில்லம்பு
பட்டுருவிற் றென்னை, யென் பாட்டம்பு, நின்குலத்தைச்
சுட்டெறிக்கும் என்றே துணி. – கவிச்சக்ரவர்த்தி கம்பர்
(பேசுமுன் நிதானமே பிரதானம், என்பதை "வில்லம்பு சொல்லம்பு" என்று உவமையுடன் காட்டும்பாட்டு)

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாளுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.
யான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
– திருமூலர் (திருமந்திரம்)



(உறவை, ஊரை நாட்டை மட்டுமல்லாம் உலகத்தையே – வாழ்த்தி –
"ஒன்றே குலம்" – என்ற ஆதித்தமிழ் ஞானி திருமூலராகும்.)

Koviloor Digital Library



காயத்ரீ ஜபம், அதுவே தவம்

நீங்கள் உண்மையிலேயே உள்ளார்ந்த ஆர்வமும், உண்மையும், நம்பிக்கையும் கொண்டவராயின் நீங்கள் வேறுபட்ட மதத்தையோ சாதியையோ சார்ந்தவராயினும் காயத்ரி சாதனையை மேற்கொள்ளலாம்.

இந்த மந்திரத்தில் எத்தகைய உயர்ந்த மதிப்பு மிக்க பாரம்பரியத்தைப் பெற்றுள்ளீர்கள் என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளுங்கள். புராதன ரிஷிகளால் நமக்கு கொடையாக வழங்கப்பட்ட இந்தத் தெய்வீக சக்தியினைப் புறக்கணிக்காதீர்கள். ஒழுங்கான தினசரி காயத்ரி ஜபத்தைத் தொடங்குங்கள்.

- ரிஷிகேசம் ஸ்ரீ சிவானந்த சுவாமிகள்

காயத்ரீயைக் கண்ட முனிவர்

ஓம். உடல், ஆன்ம, தெய்வீக வாழ்வுக்குரிய **(பூர், புவ, சுவஹ)** உலகங்களுக்கு மூலாதாரமாய் உள்ள **(சவிதுர்)** போற்றுதலுக்குரிய, யாவரிலும் மேலான தெய்வீக மெய்ம்மையின் **(வரேண்யம், தேவஸ்ய)** தெய்வீகப் பேரொளி மீது **(பர்கோ)** நாம் தியானிக்கின்றோம் **(தீமஹி)**. நாம் (மேலான உண்மையை உணரும்படி) அந்த மேலான தெய்வம் **(தத்)** நம் **(ந)** அறிவுக்கு **(தியோ)** ஒளியூட்டட்டும் (ப்ரசோதயாத்).

காயத்ரீ விஸ்வாமித்திரரால் வெளிப்படுத்தப்பட்டது. அதே விஸ்வாமித்திர முனிவர்தான் ஆதித்ய ஹிருதயம் மூலம், சூரியவழிபாட்டு மறைபொருளை, இராமனுக்குப் போதித்து வழிப்படுத்தியவர் ஆவார்.

– புட்டபர்த்தி ஸ்ரீ சத்யசாய்பாபா



Koviloor Digital Library



இஷ்ட தெய்வ காயத்ரீகள்!

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்றது ஆதித்தமிழ் ; "ஏகம்ஸத் விப்ராபஹுதா வதந்தி" என்று, அந்த ஒரேகடவுளை உறுதிசெய்கிறது ரிக் வேதம். யுகம்பல கண்ட நமது சமய வழிபாட்டிலே, "அ" கரத்திற்கும் முதலிலே பிள்ளையார் சுழி எப்படியோ, அதுபோல – மந்திரங்கள் அனைத்திற்கும் முதலானது பிரம்ம காயத்ரீ.

"வேதமாதாவாகப் போற்றப்படுகின்ற காயத்ரீ தேவி, தன்னை வழிபடுபவரை காத்து ரக்ஷிப்பவள், கருணைக் கடலாக விளங்குபவள். காயத்ரீ மந்திரத்துள் வருகின்ற "தீமஹி" என்பதற்கு "தியானிப்போமாக" என்பது பொருள். –ஜீவாத்ம, பரமாத்ம சங்கம மகத்துவத்தை, கலியுகத்திலே மாந்தர்கள் அனைவர்க்கும் உணர்த்திடும் ஒரே மந்திரம் காயத்ரீயாகும். பிரதான "காயத்ரீ" பற்றிய ஏராளமான விபரங்களோடு, பல மஹான்களின் அருளுரைகளையும், வேதாகம இதிகாசக்குறிப்புகளையும் கொண்ட **"காயத்ரீ மணிமாலை"** நூலுக்கான முன்னோட்டப்பிரசுரமே இது. அடியேன் (வேம்பத்தூர் கிருஷ்ணன்) கோர்க்கும் இந்த "காயத்ரீ மணிமாலை"க்கு, உங்களது அருளையும் பொருளையும் பரிவுடன் வேண்டுகின்றேன்.

விஸ்வாமித்திரர் அருளிய நித்திய ஜபத்திற்கான பிராதன காயத்ரீயோடு, நமது முன்னோர், நூற்றுக்கும் மேற்பட்ட சகல தேவதா தெய்வ மந்திரகாயத்ரீகளை சிரத்தையோடு உருவாக்கித்தந்துள்ளனர். அவற்றுள் முப்பது காயத்ரீகள் இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளது.. அவரவர் இஷ்டதெய்வ காயத்ரீ மந்திரங்களை பிழையின்றிப் பாடிப்பழகி – ஜபம்செய்து, அவசரமான இன்றைய கம்ப்யூட்டர் யுகத்திலும், ஆனந்த வாழ்வுக்கான தவம் செய்தவர்களாகி, சௌபாக்ய வைபோக சாயுஜ்யம் பெறுவோமாக.



Koviloor Digital Library

கணபதி

ஓம் தத்புருஷாய வித்மஹே வக்ர துண்டாய தீமஹி
தந்நோ தந்தி: ப்ரசோதயாத்



முருகன்

ஓம் தத்புருஷாய வித்மஹே மஹா ஸேனாய தீமஹி
தந்ந: ஷண்முக : ப்ரசோதயாத்



சிவம்

ஓம் தத்புருஷாய வித்மஹே மஹாதேவாய தீமஹி
தந்நோ ருத்ரப் : ப்ரசோதயாத்



விஷ்ணு

ஓம் நாராயணாய வித்மஹே வாசுதேவாய தீமஹி
தந்நோ விஷ்ணு : ப்ரசோதயாத்



பிரம்மா

ஓம் வேதாத்மனாய வித்மஹே ஹிரண்ய கர்ப்பாய தீமஹி
தந்நோ ப்ரஹ்ம : ப்ரசோதயாத்



அக்னி

ஓம் வைச்வானராய வித்மஹே லாலீலாய தீமஹி
தந்நோ அக்னி : ப்ரசோதயாத்



Koviloor Digital Library

துர்கை

ஓம் காத்யாயனாய வித்மஹே கன்யகுமாரி தீமஹி
தந்நோ துர்கி : ப்ரசோதயாத்



லக்ஷ்மி

ஓம் மஹாதேவ்யை ச வித்மஹே விஷ்ணு பத்னிச தீமஹி
தந்நோ லக்ஷ்மீ : ப்ரசோதயாத்



சரஸ்வதி

ஓம் மாத்ருகாயை ச வித்மஹே ஸரஸ்வத்யை ச தீமஹி
தந்நோ ஸரஸ்வதி : ப்ரசோதயாத்



நந்தி

ஓம் தத் புருஷாய வித்மஹே சக்ர துண்டாய தீமஹி
தந்நோ நந்தி ப்ரசோதயாத்



கருடன்

ஓம் தத் புருஷாய வித்மஹே ஸுவர்ண பக்ஷாய தீமஹி
தந்நோ கருட : ப்ரசோதயாத்



அநுமன்

ஓம் வாயுபுத்ராய வித்மஹே ராமதூதாய தீமஹி
தந்நோ ஹநுமத் : ப்ரசோதயாத்



Koviloor Digital Library

குரு

ஓம் குரு தேவாய வித்மஹே பரப்பிரம்மணே ச தீமஹி
தந்நோ குரு : ப்ரசோதயாத்



நரஸிம்மம்

ஓம் வஜ்ரநகாய வித்மஹே தீக்ஷ்ண தர்ம்ஷ்ட்ராய தீமஹி
தந்நோ நாரஸிம்ஹ : ப்ரசோதயாத்



ஹயக்ரீவர்

ஓம் வாகீச்வராய வித்மஹே ஹயக்ரீவாய தீமஹி
தந்நோ ஹம்ஸ : ப்ரசோதயாத்



ராமர்

ஓம் தாசரதாய வித்மஹே சீதாவல்லபாய தீமஹி
தந்நோ ராம : ப்ரசோதயாத்



கிருஷ்ணர்

ஓம் தேவகி நந்தனாய வித்மஹே வாசுதேவாய தீமஹி
தந்நோ கிருஷ்ண : ப்ரசோதயாத்



தத்தர்

ஓம் தத்தாத்ரேய வித்மஹே திகம்பராய தீமஹி
தந்நோ தத்த : ப்ரசோதயாத்



Koviloor Digital Library

சூரியன்

ஓம் பாஸ்கராய வித்மஹே மஹத்யுதிகராய தீமஹி
தந்நோ சூர்ய : ப்ரசோதயாத்



சந்திரன்

ஓம் பத்மத்வஜாய வித்மஹே ஹேமருபாய தீமஹி
தந்நோ ஸோம : ப்ரசோதயாத்



செவ்வாய்

ஓம் வீரத்வஜாய வித்மஹே சக்தி ஹஸ்தாய தீமஹி
தந்நோ பௌம : ப்ரசோதயாத்



புதன்

ஓம் கஜத்வஜாய வித்மஹே சுகஹஸ்தாய தீமஹி
தந்நோ புத : ப்ரசோதயாத்



வியாழன்

ஓம் வ்ருஷபத் வஜாய வித்மஹே க்ருணி ஹஸ்தாய தீமஹி
தந்நோ குரு : ப்ரசோ தயாத்



வெள்ளி

ஓம் அஸ்வத்வஜாய வித்மஹே தநுர் ஹஸ்தாய தீமஹி
தந்நோ சுக்ர : ப்ரசோதயாத்



Koviloor Digital Library

சனீஸ்வரர்

ஓம் காகத்வஜாய வித்மஹே கட்க ஹஸ்தாய தீமஹி
தந்நோ மந்த : ப்ரசோதயாத்



ராகு

ஓம் நாகத்வஜாய வித்மஹே பத்மஹஸ்தாய தீமஹி
தந்நோ ராஹு : ப்ரசோதயாத்



கேது

ஓம் அஸ்வத்வஜாய வித்மஹே சூலஹஸ்தாய தீமஹி
தந்நோ கேது : ப்ரசோதயாத்



ஐயப்பன்

ஓம் பூதநாதாய வித்மஹே ஹரிஹரபுத்ராய தீமஹி
தந்நோ சாஸ்தா ப்ரசோதயாத்



அம்சம்

ஓம் ஹம்ஸ ஹம்ஸாய வித்மஹே பரம ஹம்ஸாய தீமஹி
தந்நோ ஹம்ஸ : ப்ரசோதயாத்



நாகர்

ஓம் ஸர்பராஜாய வித்மஹே ஸஹஸ்ரபணாய தீமஹி
தந்நோ நாகப் ப்ரசோதயாத்




Koviloor Digital Library



"ஏறுமயில் ஏறிவிளையாடும்
முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி
பேசும் முகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை
தீர்க்கும் முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி
நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த
முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர
வந்தமுகம் ஒன்றே
ஆறுமுகம் ஆன பொருள்
நீயருளல் வேண்டும்
ஆதிஅரு ணாசலம்
அமர்ந்த பெருமாளே."

— திருப்புகழ்



KOVILOOR ANDA... LIBRARY KOVILOOR

அன்பே சிவம் ஆன முருகா போற்றி
ஆறுமுக மால்மருகா போற்றி போற்றி.